தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இல்லத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.50 லட்சம் செலவாகும், ரூ. 52,000 கருவிகள் முதலியன வாங்குவதற்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவு செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஒரு தொழு நோய் பிச்சைக்காரர்கள் விடுதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும், இன்னும் பல இடங்களில், குறிப்பாகக் கோவிலுக்குப் போகிற பாதைகளில் தொழுநோய்ப் பிச்சைக் காரர்கள் இன்னும் நிறைய பேர் பிச்சை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களைக் கொண்டு போய் இல்லங்களில் வைத்தாலும், அவர்களில் சிலர் ஓடி வந்து விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஓடி வந்தவர்களைக் கேட்டால் அங்கே கடுமையாக வேலை கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். இது உண்மைதானு, கடுமையான வேலை தருவதுதான் அவர்கள் ஓடிவருவதற்குக் காரணமா என்பதை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஓடி வருவது உண்மையாகக் கூட இருக்கலாம். நிறைய பிச்சைக்காரர்கள் கூட திரும்பி வருவது உண்மையாக இருக்கலாம். ஆனால் அந்த சென்டர்களில் கடுமையான வேலை தரப்படுகிறது என்பதால் அவர்கள் ஓடி வருகிறார்கள் என்று சொல்லி விடமுடியாது. அவர்களுக்கு அங்கே சுலபமான வேலைதான் தரப்படுகிறது. அதுவும் கை, கால் அங்கஹீனமானவர்களுக்கு அதிகமான வேலை கிடையாது. பொதுவாக கோழி வளர்ப்பு, நூல் நூற்றல், கைத்தறி ஆடை நெய்தல் போன்ற வேலைகள்தான் தரப்படுகிறது. அவர்கள் பிச்சை எடுத்தே பழகி விட்ட காரணத்தால், அதையே அவர்கள் ஒரு தொழிலாகக் கொண்டு செய்து சுதந்திரமான வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்து கொண்டிருந்த காரணத்தால் பல பேர் திரும்பி வந்து விடுகிறார்கள். சிலர் திருவிழாக்காலங்களில் எங்களுக்கு விடுமுறை கொடுத்து வெளியே அனுப்பி விடுங்கள், நாங்கள் பிச்சை எடுத்து விட்டு மறுபடியும் வந்து விடுகிறோம் என்று கூட கேட்கிறார்கள், இது அவர்களின் பிச்சை எடுக்கும் மனப்பான்மையைத்தான் காட்டுகிறது.

1974 சனவரி 19]

திரு. க. மு. இராசகோபால்: பிச்சை எடுப்பது என்பது தெருவிலே பிச்சை எடுப்பது மட்டும் பிச்சை அல்ல. அடிப்படையிலேயே பழைய காலத்திலிருந்தே தொன்று தொட்டு ஆலயங்களில் பிச்சை எடுப்பது என்பது இருந்து வருகிறது. அதற்காக இடம் கூட ஒதுக்கியிருக்கிருர்கள். அதோடு மட்டுமல்லாமல், மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் அன்ன சத்திரங்கள் என்று வைத்து, பிச்சை அளித்து வருகிருர்கள். அதையும் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஏழைகளுக்கு உணவு அளிப்பது என்பது அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. அதை அரசு தடை செய்வது நியாயமாக இருக்காது. பிச்சை எடுப்பது என்பது வெவ்வேறு முறைகளில் இருக்கலாம். இருப்பவர்கள் கூட ஏதேதோ சொல்லி பிச்சை எடுக்கிருர்கள். உண்மையிலேயே அங்கஹீனமாகி, வேலை வாய்ப்பு இல்லாமல், வயோதிகமான நிலையில் இருப்பவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில்தான் அரசு கவனம் செலுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக தொழுநோய் பிடித்தவர்களுக்குத்தான் முதலிடம் அளித்து, சிகிச்சையும் அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு தருகிறது. இப்படிப்பட்ட இல்லங்களில் இருந்து சிகிச்சை பெற்று, பலர் வீடுகளுக்குக்கூட திரும்பச் சென்று இருக்கிருர்கள். இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இப்படித்தான் நடத்தி வருகிருேம்.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்த தொழுநோய் புனர்வாழ்வு விடுதிகளில் சேருவதற்கு, அவர்கள் தொழுநோய் பிடித்த பிச்சைக்காரர்கள் என்று சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும், அப்படிப் பெற்றிருந்தால்தான் சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்கிருர்கள். அதை மாற்றி, தொழுநோய் பிடித்த அனைவரையும் சேர்த்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: எத்தனையோ பேர் தொழுநோய் பிடிக்கப்பட்டு இருந்தாலும், அவர்கள் குடும்பத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மருத்துவம் தரப்பட்டு வாழ்ந்து கொண்டு வருகிருர்கள். குடும்பத்தாராலும், ஏற்றுக் கொள்ளப்படாமல், வேலை எதுவும் செய்யமுடியாமல் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான், புனர்வாழ்வு கொடுக்க